142

142
2-52

# ஆச்சாரியார் அலசுகிறார்

...ICE OF THE RE... OF ...
23 APR 952
MADRAS

C

வேமபன்

O-,1c92:g
N52
68659

# ஆச்சாரியார் அலசுகிறார்

‘வேம்பன்’

OFFICE OF THE REGISTRAR OF
28 APR 952
MADRAS

★

கன்னி வெளியீடு : 1

கன்னி வெளியீடு : 1
முதற்பதிப்பு : 1952
உரிமைப் பதிவுடையது.

68659

விலை 8 அணா

O—,1092;9
N52

வெளியிடுவோர் :
**கன்னி வெளியீடு**
6/24, காந்திபுரம்
**கோயமுத்தூர்.**

## படையல்

இலக்கியத்தை
இயக்கமாக ஆக்கித்
தேசிய உணர்வு
கிளர்ந்தெழச் செய்த

**சிலம்புச் செல்வருக்கு**

## முன்னுரை

* கடந்த சில காலமாகச் சிலப்பதிகார மணம் தமிழகம் எங்கணும் பரவி வருகிறது. நல்லது செய்யும் உலகத்தில் 'நல்லது இது' என்று அடையாளம் காண்பதற்காகவாவது தீமை என்ற ஒன்று இருக்கத்தான் செய்கிறது.

* சிலப்பதிகாரப் புகழ் பாடியது ஒரு எடு; சில நாள் இடைவெளியில் அதன் பகுத்த அறிவு பல்டி அடித்தது. புகழ்ச்சிக்கு உரியதா யிருந்தது பழிப்புக்கு ஆளாயிற்று.

* அதன் திருப்பணிக்கு உதவிய பெருந் தொண்டைச் செய்தவர்களில் உயர்திரு வித்து வான் **வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார்** ஒருவர். அவருடைய எதிர்ப்பு நூல் 'சிலப்பதி காரமும் ஆரியக் கற்பனையும்' என்றதலைப்பில் வெளிவந்தது. அதிலுள்ள கருத்துக்கள் தவ றென்று பட்டதால், இதனை எழுத நேர்ந்தது.

* கருத்து வேறுபாட்டைப் புலப்படுத்தும் வேகம் தவிர, தனிப்பட்ட எவரையும் தாக்கும் நோக்கம் ஆசிரியருக்கு இல்லை.

# ஆச்சாரியார் அலசுகிறார்

"தமிழகத்தை ஏமாற்றிவரும் நூற்களுள் தலைசிறந்தது சிலப்பதிகாரம். இதில் சொல்லழகேயன்றிக் கலையழகு சிறிது மில்லை. 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று ஐயர் ஒருவர் புகழ அவரைப் பின் பற்றிய போலித் தமிழரும் புகழ்வாராயினர்."

இவ்வாறு ஓர் உண்மைத் தமிழர் குரல் கொடுக்கிறார். உண்மைத் தமிழர் என்றால், அற்ப சொற்பமான உண்மைத் தமிழர் என்று எண்ணிவிடாதீர்கள். தமிழ்ப்பேராசியர்; ஆரியம் என்றாலே வேரோடு கல்லி எறிகிறவர்...ஏ, அப்பா! உண்மையின் வடிவமே அவர்தான். உண்மையின் வடிவம் இப்படித்தான் இருக்கும் என்று காட்டுவதற்காகவே அவர்தம் திருவுருவத்தை அட்டைப்படத்திலேயே 'தீட்டி' யிருக்கிறார்கள் போல் தோன்றுகிறது. பார்த்தவுடனேயே உண்மையின் வடிவம்...பேராசிரியராகிய அவரைப்பற்றிப் பேசக்கூடாது. இது போதும். ஏனென்றால்,

'ஆளைத் திட்டாமல் நேரியமுறையில் தகுந்த ஆதாரம் காட்டி மறுப்பார்களாக—'

என்று இறுதியாகக் கட்டளை பிறப்பித்திருக்கிறார். ஆகையால் அந்தப் பேராசிரியர் யாராக இருந்தாலும் அவரைப் பற்றி நாம் மிகுதியாகக் கவலைப்படத் தேவையில்லை. பச்சையப்பன் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து தமிழ்ப் புலமைப்பணி நடாத்திவரும் அப்பேராசிரியர்தம் 'இக்குநோக்கித் தெண்டன் இடுவதோடு' அவரைப்பற்றிய நினைவை விடுப்போம். அவர் திருநாமம் மட்டும் மறந்து விடாதீர்கள்: உயர்திருவாளர் பேராசிரியர் வித்துவான் வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் அவர்கள் P. O. L.

ஆச்சாரியார் அவர்களுக்குச் சிலப்பதிகாரம் என்றாலே சிற்றம் பொங்குகிறது. அந்தச் சிற்றத்தை அட்டையே காட்டுகிறது. ஒரே கறுப்பும் சிவப்புமாக — அவர் தம் திரு வுருவமும் சேர்ந்தே காட்சியளிக்கிற அந்த அட்டையைப் பார்த்தவுடனேயே

கறுப்பும் சிவப்பும்
வெகுளிப் பொருள

என்ற தொல்காப்பியச் சூத்திரம் நினைவில் எழுகிறது. ஆச்சாரியாரின் சிற்றத்தை உணர்ந்த பகலவன் பாசறையார் சிற்றத்துக்குப் பண்டைத் தமிழர் (திராவிடர் அல்ல—) கொண்ட வண்ணங்களை அமைத்ததைக் காணும்போது 'ஆகா' என்று பாராட்டாமல் இருக்க முடியவில்லை!

'வெளியிட்ட ஆட்களைப் பாராட்டவும் கூடாது' என்று பேராசிரியர் கட்டளை பிறப்பித்தாலும் பிறப்பிக்க லாம். ஆகையினால், இனி ஆச்சாரியார் அவர்களின் அடிச் சுவட்டையே பின்பற்றி அப்பெரியார் காட்டிய முறை யிலேயே போகிறோம்.

அட்டையைப் புரட்டுகிறேன். முகப்பு; அப்புறம் பதிப்புரை; அதிலே நன்றி முதலிய சடங்குகள் — அதன் பிறகு —

பெரியார் ஈ. வெ. ரா. மதிப்புரை காணப்படுகிறது. பெரியார் என்று பார்த்தவுடனேயே உள்ளமும் உச்சியும் நமக்குக் 'குளிர்ந்து' போகின்றன. சிலப்பதிகாரத்தை எத்தனையோ முறை படித்து ஆராய்ந்து பல முடிவுகளைக் கண்ட பேராசிரியர், சிலப்பதிகாரத்தின் அமைப்பையேனும் உணராத ஒருவரிடம் 'மதிப்புரை' தேட நேர்ந்த அவ லத்தை நினைக்கிறபொழுது... ஆகா, அருந்தமிழே உன் நிலை எவ்வளவு உயர்ந்துவிட்டது! நீ நீடுழி வாழ்க' என்று வாழ்த்தாமல் வேறு என்ன செய்வது! பேராசிரியர் அவர் களே! வாழ்க நும் புலமை!

சிலப்பதிகாரத்தைப் படிக்காவிட்டால் என்ன, அதை ஆராய்ந்த புலவர் பெருமகனாரின் தெள்ளத் தெளிந்த

ஆராய்ச்சி முழுவதையும் படித்தால் மதிப்புரை தர இயலாதா என்று ஒரு கறுப்புப்பூனை கண் சிமிட்டுகிறது. ஆம்... இந்தப் 'பிராக்கட் தமிழர்' நாட்டிலே ஒரு நூலைப்பற்றித் தெரிந்தவர்களைக் கேட்டதாகச் சொன்னவர்களைப் பார்த்தவர்கள் சொல்லக் கேட்டாலே போதும்; உடனே இலக்கிய ஆராய்ச்சியில் இறங்கிவிடலாம். அல்லவா? அப்படித்தான் வைத்துக்கொண்டாலும் மதிப்புரைக்கு வந்த இந்தக் குட்டிப் புத்தகத்தையாவது முழுவதாகப் படித்தாரா ஈ. வே. ரா. பெரியார்! அவர் சொல்லுகிறார்:

> 'அதன் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன்."

எப்படி! ஆம்; அவருக்கு நேரம் ஏது? வயதாயிற்று; திராவிடப் பணிக்கே நேரம் போதவில்லை. இதை எங்கே படிப்பது! அங்குமிங்கும் நெட்டோட்டம்விட்ட அவர், ஆச்சாரியரைப் பாராட்டி வாழ்த்தி நன்றி செலுத்துகிறார். மதிப்புரை முடிகிறது.

நூல்...ஆம், ஆராய்ச்சி...தொடங்குகிறது. ஆகா! தொடக்கமே எவ்வளவு நன்றாக இருக்கிறது! நூலின் அமைப்பு, அச்சு...எல்லாம் முதல்தரம்...நூலின் கருத்து எப்படி என்கிறீர்களா? அதுதானே நம்முடைய வேலை. இனி ஆச்சாரியார் அலசு அலசு என்று அலசிவிட்ட அந்தக் குளத்தில் இறங்குவோம். சேறு ஒட்டுமே என்று தயங்காமல் இறங்க வேண்டியதுதான். பேராசிரியரே தாம் குழப்பிய குட்டையிலே சேறு பூசிய திருக்கோலத்தோடு நிற்கிறார், நாம் என்ன கொம்பு முளைத்தவர்களா, சும்மா இறங்கலாம்.

முதலில் எடுத்தவுடனே சிலப்பதிகாரத்துக்கு நற்சான்று இதழ் வாசிக்கிறார்: 'தமிழகத்தை ஏமாற்றிவரும் நூற்களுள் தலைசிறந்தது சிலப்பதிகாரம்." தமிழ் படித்து, தமிழ் கற்பித்து...வாழ்கிற பேராசிரியர் கண்டுபிடித்த உண்மையைப் பார்க்கும்போது, 'ஐயோ தமிழ்நாடே! இத்தனை நூற்றாண்டுகளாக ஏமாந்தாயே! இதோ பெரு

மகனார் நல்வழி காட்டுகிறார்; போ, அவரைப் பின்பற்று' என்று உபதேசம் செய்ய நம் உள்ளம் எழுகிறது. நம் உபதேசத்தைப் பாரதியாரின் குரல் தடுக்கிறது.

'நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்' என்ற பாராட்டுப் பெற்ற காப்பியமல்லவா? இதைப்பழிக்கலாமா' என்ற நினைவு எழும்போது ஆச்சாரியார் உதவுகிறார். "பாரதியார் ஐயர்; அவரைப் பின்பற்றுகிறவர்கள் போலித் தமிழர்கள்......" என்ற ஒளி வீசி மன இருளைத் தொலைக்கிறார். "ஓகோ, ஐயர் புகழ்ந்த காப்பியமா இது! அப்படியானால் எடு நெருப்புப் பெட்டியை" என்று ஆத்திரம் சீறி எழுகிறது. நெருப்புப் பெட்டியை எடுத்தவுடனே நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் கையைப் பிடித்துக்கொள்கிறார். அவர் சொல்கிறார்:

> "சிலப்பதிகாரமானது ஒன்பான் சுவையும் ஒருங்கமைந்த சிறந்த காப்பிய மாதலன்றித் தமிழக வரலாற்று நூல் எனவும், தமிழ் மொழி வரலாற்று நூல் எனவும், கவின் கலை நூல் எனவும் மதிக்கத்தக்க சிறப்புடையதாகவும் எல்லா வகையானும் தமிழுக்கே உரிமையுடையதாகவும், தமிழர் ஆண்மையை விளக்குவதாகவும் உள்ளது",

நாட்டாரைப் பின்பற்றி வருகிற விபுலாநந்த அடிகளாரும் ஒன்று சொல்கிறார்:

> "இளங்கோவடிகளுடைய முத்தமிழ்ப் புலமையும் அகலக் கவி யமைக்கும் ஆற்றலும் பழந்தமிழரது பண்புசான்ற வாழ்க்கையை எழுதிக் காட்டும் திறமையும் சிலப்பதிகார நூலினுள்ளே தெளிவுறக் காட்டப்பட்டன."

அந்த இரு புலவர்களோடு இன்னொரு புலவரும் குரல் கொடுக்கிறார். எந்தத் தமிழ் நூலையும் தட்டித் தட்டிப் பதம்பார்த்து முடிந்த இடத்திலெல்லாம் அதன் பல்லையும்

தட்டித் தலையையும் தடவப் பார்க்கும் ஆராய்ச்சியாளர் எனச் சிலரால் புகழப்படுகிற அந்தப் பெரியார் சொல்கிறார்:

> "நமது தமிழ் இலக்கியக் கருவூலத்தில் சிலப்பதிகாரம் ஓர் விலையரிய மாணிக்க மாகும்"

இந்தக் குரல்களெல்லாம் கேட்டவுடன் ஆச்சாரியாரைப் பார்க்கிறோம். ஒருவேளை அவர்களெல்லாம் போலித் தமிழர்களாக இருக்கலாமோ? அப்படித்தான் இருக்க வேண்டும். இதோ நம் முன் நிற்கிறாரே—கறுப்பும் சிவப்பு மாக-இவர்தான் உண்மைத் தமிழர்! ஐயா உண்மைத்தமிழரே! விபுலாநந்தர், வேங்கடசாமி நாட்டார் போன்றவர்களை மீறி வளர்ந்த நெடுந்தகையே! வாழிய பல்லூழி! வாழ்ந்துகெட்ட தமிழனுக்கு வளமூட்ட வந்த வானரசே! வாழ்க நும் உண்மைத் தமிழ்மை!

★

சிலப்பதிகாரத்தைப் புகழ்வதற்குரிய காரணம் என்ன தெரியுமா? அதை அலசி அறிந்த ஆச்சாரியார் அருளிச் செய்கிறார்.

> "...இக்கதை, பல சிறு சிறு புத்தகங்களாகத் தோன்றிச் சிலருடைய பெட்டி பேழைகளை நிரப்பி வருகின்றது. இதுபற்றி இக் கதையைக் கூறும் நூல் புகழப்படுகிறதே ஒழியப் புகழ்வதற்குக் காரணம் வேறில்லை என்று உறுதியாகக் கூறுகின்றேன்."

என்ன உறுதிப்பாடு, பார்த்தீர்களா? நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்ற நக்கீரனாரின் பரம்பரையில் வந்த அப்பட்டமான அசல் உண்மைத் தமிழர்! புகழ்வதற்கு வேறு காரணமே கிடையாது! 'அடடா! தமிழ்ப் புலவனே! நீ செத்துச் சுண்ணும்பாகி எத்தனை காலமடா ஆயிற்று! சிலப்பதிகாரத்தைப் புகழ்வதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடித்துக் கூறிய இந்தப் புலவர் சிகாமணிக்கு என்ன பரிசடா தரப்போகிறாய்! நீ என்ன பரிசில் தரப்

போகிறாய்! ஆச்சாரியாரே தமிழைப்போலவே வளம்பெற்று வாழும்! என்று வாழ்த்து. வேறென்ன இருக்கிறது உன் கையில்!'

★

நடுவிலே ஆச்சாரியார் அவர்களுக்கு நமது சென்னைப் பல்கலைக் கழகத்தின் நினைவு வந்துவிடுகிறது. மனசார ஒரு வசை (புராணப்) பாடிவைக்(க்)கிறார். M. O. L. பட்டத்துக்கு இந்த அரிய ஆராய்ச்சியை அனுப்பினாராம். ஒரு முறை அனுப்பினார்; தோல்வி. இரண்டாம் முறை வேறே தலைப்பிட்டு அனுப்பினார்; படுதோல்வி. அதற்குமேல் 'இந்தக் கஜினி முகமது வேலை நமக்கு வேண்டாம்; இருக்கவே இருக்கிறார்கள் நம் பிராக்கட் (தமிழர்)கள்' என்று வாளாவிருந்தார்.

> "தமிழகத்தையே ஏமாற்றிய இச்சிலப்புக் காதை என்னை ஏமாற்றியது ஓர் வியப்பன்று. எனவே, என்னுடைய கருத்துக்களைத் தமிழ்ப் பெருமக்கள் ஏற்று மகிழும் காலத்தை எதிர் நோக்கியிருந்தேன்."

என்று உண்மைத் தமிழர் உரைக்கிறார். ஆகா! தமிழகமே! நீதான் ஏமாந்தாய்! இந்த ஆராய்ச்சி ஆச்சாரியாருமா இப்படி ஏமாற வேண்டும்! ஏமாறிய தமிழகம், ஏமாற்றப் பட்ட ஆச்சாரியார் இரண்டு கட்சியும் கட்டிப்புரண்டு—கூடிக் குலவி—கொஞ்சி மகிழும் காலம் வந்துவிட்டது! சிலப்பதிகாரமே! ஏ, ஆரியக் கற்பனையே! வந்தது உன் சீரழிவு! பார்த்தாயா! தமிழகம் விழித்துக் கொண்டது! ஆச்சாரியும் பள்ளியெழுச்சி பாடிவிட்டார்! இனி, ஐயோ பாவம், உன் கதி அதோகதிதான்...!

★

இந்த நல்ல காலம் விடிந்த முகூர்த்தம் தெரிய வேண்டுமல்லவா?

> "சென்னையில் 24—3—51-ல் கண்ணகி பந்தலில் சிலப்பதிகார மகாநாடு ஒன்று கூடியது...காலத்தை எதிர்நோக்கியிருந்த எனக்கு இஃது ஒரு வாய்ப்பாயிற்று."

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து" என்ற வள்ளுவர் குறளைப் படித்தபிறகு மறவாமல் இருந்திருக்கிறார் இந்தப் பேராசிரியர்!

சிலப்பதிகார மகாநாடு! என்ன கேவலம்! தமிழரை ஏமாற்றிய ஆரியக் கற்பனைக்கு ஒரு மகாநாடு! ஆத்திரம் ஆத்திரமாக வந்தது ஆச்சாரியாருக்கு! இருக்காதா பின்னே? பல்கலைக் கழகத்தாரிடம் தம்மைக் காட்டிக்கொடுத்து இரண்டுமுறை ஏமாற்றிய இந்தச் சிலப்பதிகாரத்துக்கு மகாநாடா!

பிடித்தார் பேனாவை; திட்டு திட்டு என்று எழுதித் தள்ளினார்! அச்சிடுவதற்கு ஆள் தேடினார். ஆபத்பாந்தவராகிய ராமபிரான் 'விடுதலை'க்கு வழிகாட்டினார். பிராக்கட் தமிழரின் பெரும் பாராட்டுக்கு நடுவில் திக்குமுக்காடி அச்சாகிவெளிவந்தது! ஆச்சாரியர் உள்ளம் களிகொண்டது. "தொலைந்தது சிலப்பதிகாரச் சனியன். தமிழகம் வாழ்க!" என்று உள்ளம் பூரித்தார், கறுப்புச்சட்டை வடிவத்திலே எதிர்காலத் திராவிட பிராக்கட் (தமிழகம்) உருவெளியாகத் தோன்றியது. கறுப்புக்கோட்டு அணிந்து கல்லூரிக்குச் சென்றார். அங்கே ஒரு பெரிய கடிதக் குவியல்; ஆச்சாரியாருக்குத்தான். எல்லாம் தமிழ்ப் பேரறிஞர்களின் பாராட்டுக் கடிதங்கள் தான். "அடடா! தூங்கும் தமிழகத்தைத் தூண்டி விட்ட தூய்மணியே! தொல்லைச் சிலம்பொடிக்கும் தொண்டின் திருவுருவே! ஆகாகா! ஆகாகா, ஆகாகா, ஆகாகா..." ஒரே பாராட்டிலே மூழ்கித் திளைத்துக் கிடந்த ஆச்சாரியாரைப் பேட்டி காண வந்தது ஒரு கூட்டம். "பள்ளியெழுச்சி பாடிய பாணரே! நாங்கள் தங்கள் ஆராய்ச்சிக்கு அடிமையானோம். ஆட்கொள்ள வேண்டும்" என்று முறையிட்டார்கள். பிறந்தது புது முயற்சி. பகலவன் பாசறையில் சிலப்பதிகாரமும் ஆரியக்

கற்பனையும் சந்திசிரிக்க வெளியிடுவதென்று முடிவாயிற்று. சிலப்பதிகாரமாகிய ஆரியக் கற்பனையைச் சந்திசிரிக்க வேண்டியதுதானே!

புலவர் பெருமக்களின் அளவில்லாத பாராட்டுதல்களும் பகலவன் பாசறை(!)யின் முறையீடும் ஆச்சாரியாரை நூலாக்கத் தூண்டின; ஆக்கினார்; அருளினார்; அச்சிட்டார்; வெளியிட்டார்!

தமிழகம் வாழ்ந்துவிட்டது!

★

"சிலப்பதிகாரம் திருக்குறளுக்கு இலக்கியம் ஆகுமா?"— இது ஆச்சாரியப் பெருவீரர் இளங்கோவின் இதயத்தில் எறிந்த வெற்றிவேல்! இந்தக் கொடுவேலைப் பார்த்தாலே நடுங்கியிருப்பார் இளங்கோவடிகள்!

ஆச்சாரியார் பெருந்தமிழ்ப் புலவர். உவமை இலக்கணம் எல்லாம் உருவேற்றியிருப்பார். அவரிடம் ஒருபெண் போகிறாள் என்று வைத்துக்கொள்வோம். அவள் முகம் அழகாக இருக்கிறது. 'தாமரை போன்ற முகம்' என்று தமிழ்ப் புத்தகங்களைத் தொட்டுத் துருவிப் பார்த்த ஆச்சாரியாரின் உள்ளம் சொல்கிறது. உடனே அவருடைய ஆராய்ச்சி முனைந்து எழுகிறது. "அட, இவள் முகம் தாமரைபோலவா இருக்கிறது? இல்லையே! இதழ் இதழாக முகம் இல்லை; காம்பைக் காணோம்; ......சேச்சே, தாமரை போன்ற முகம் என்று சொல்வதே தவறு" என்றமுடிவுக்கு வந்து, தம் கைக்கு வந்த அணியிலக்கணப் புத்தகத்தைக் கிழித்தெறிகிறார்!

தாமரைபோன்ற முகம் என்றால், அது பொருந்தாதுதானே?... இனி இப்படித்தான் தமிழ்ப் பாடம் நடத்துவார் பேராசிரியர்!

"இல்வாழ்வான் தனதுமனைவியோடிருந்து தென்புலத்தார்,தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்றவர்களைப் பாதுகாத்து வாழுவானாயின், அவன் வானுறையும் தெய்வத்

துள் வைக்கப்படுவான் என்பது குறள்
கூறும் இல்லற இலக்கணமாகும். இந்த
இலக்கணத்துக்குச் சிலப்பதிகாரம் காட்டும்
இலக்கியம் ஏதேனும் உளதோ?"

என்று வினு எழுப்பி 'இல்லை' என்பதற்கான விடையையும் ஆதாரத்தோடு நிறுவுகிருர்.

"முதற்செய்தியே இவ்வாறிருக்கத் திருக்
குறளுக்குச் சிலப்பதிகாரம் இலக்கிய
மாவது எப்படி?"

என்று ஒரே போடாகப் போட்டுச் சிலப்பதிகாரத்தைக் கொன்றே விடுகிருர். நன்ருக வேண்டும் இந்தச் சிலப்பதிகாரத்துக்கு! எத்தனை காலமாக இந்த உண்மைத் தமிழர்களை ஏமாற்றுவது! உண்மைத் தமிழா! வாழ்க நின் கொற்றம்!

ஆச்சாரியார் இத்தனை தொல்லைப்பட்டிருக்க வேண்டியதே யில்லை. "ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறளையும் எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு குறளின் ஒவ்வொரு சீருக்கும், எழுத்துக்கும் சிலப்பதிகாரத்தை இலக்கியமாக்காவிட்டால்......அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்; கோபம் வந்ததோ...ஆமாம்......" என்று ஒரு வீச்சு வீசியிருந்தாராஞல் என்ன ஆகியிருக்கும் தெரியுமா! சிலப்பதிகாரம் அடங்கி ஒடுங்கி ஆச்சாரியாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பதோடு மட்டும் நில்லாமல், வங்காளக் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருக்கும்!

இவ்வளவு எளிதிலே காரியத்தை முடிக்காமல், ஆச்சாரியார் வீணே அல்லற்பட்டிருக்கிருர்.

அவருக்குச் சொல்லுகிறேம்: ஆச்சாரியார் அவர்களே! தாமரை போன்ற முகம் என்ருல் இதழ்களைத் தேடிப் பார்க்கக் கூடிய பெரியாரே! கேளும்.

கண்ணகி கதை மறந்திருக்காது, உமக்கு. கணவனை இழந்தாள்; கதறுகிருள்... அந்த நிலையிலே வைத்து அவள் வாழ்க்கை முழுவதையும் பாரும்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்—தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்று ஒரு திருக்குறள் இருக்கிறதே நினைவிருக்கிறதா? கண்ணகி வாழ்க்கையை இந்த இலக்கணத்தோடு ஒட்டி வைத்துப் பாரும். தன்னைக் காத்த வகையும், தன்னை அடைந்த கோவலனைப் பேணிய வகையும், தகைசான்ற சொற்காத்த வகையும், இம்மூன்றிலும் சோர்வின்றி இருந்த வகையும் தெரிகிறதா? "கணவன் இறந்தாரா! ஐயோ! என்னை விட்டுப் போனீரோ! வையையில் விழுந்து சாகிறேன்" என்று செத்தாளா! இல்லையே! கணவனைக் கள்வனென்றது நெடுஞ்செழியன் தீர்ப்பு. தகைசான்ற சொல்லுக்கு ஓர் இழுக்கு ஏற்பட்டது. 'அவரே போய் விட்டார்; இழுக்குத்தானா பெரிது?' என்று எண்ணினாளா ஐயா, அந்தக் கண்ணகி? சொல்லைக் காக்க மன்னனிடம் ஓடினாள்! 'தீவேந்தன் தனைக்கண்டு இத்திறங் கேட்பல் யான்' என்று சொன்னாளே, நினைவிருக்கிறதா? சொன்னபடி செய்தாளே, மறந்துவிட்டீரா!

குறள் புரிந்ததா? சிலம்பு சரியா? இலக்கணம் ஒன்று; இலக்கியம் மற்றொன்று. இன்னும் சொல்கிறோம்:

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

இதவும் குறள்தான்

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லை கெடும்

இதுவும் குறட்பாவே. 'மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் கையிற் தனிச்சிலம்பும்' கொண்டுவந்த கண்ணகியின் கண்ணீரைக் கண்ட அளவே மன்னன் உயிர் தோற்ற கதை கூறும் இலக்கியம் இலக்கணத்துக்குப் பொருந்தாதா?

ஐயா! தமிழ்ப் பேராசிரியர் அவர்களே! புலமையின் மானத்தைத் தூக்கிலிட்டுவிட வேண்டாம். "குறள் இலக்கணம்; சிலம்பு இலக்கியம்" என்று சொல்லும் கருத்தின் நுட்பம் புரியாமல் பேசுவதாக நாங்கள் நினைக்கவில்லை;

தாங்கள் படித்த தமிழுக்கு அவ்வளவு கேவலமான மதிப்பைத் தர விரும்பவில்லை. பயனில சொல்லுதல்......குறளறிந்த தங்களுக்குத் தகாத செயல், ஐயா!

★

திருக்குறளைக் கையிலேந்திச் சிலம்பைச் சாடிய பெருந்தகையார், சென்னையில் சிலப்பதிகார மகாநாடு நடந்த பந்தலைப் பிடிக்கிறார். காரைக்காலம்மையார் பந்தல் என்று வைக்கக்கூடாதா?—இது அவர் மனக்குறை. 'சிலப்பதிகாரம் ஆரியக் கற்பனை' என்று எழுதியவர் நம் பெரியார். அந்த நூலுக்கு மதிப்புரை தந்த இன்னொரு பெரியார் சொல்கிறார் கேளுங்கள் :

> "......பச்சை ஆரிய ஆதிக்கப் பிரச்சார நூல்களான மனுதர்மம், இராமாயணம், பாரதம், கீதை, பெரிய புராணம்......"

பெரிய புராணமும் ஆரிய ஆதிக்கப் பிரச்சார நூல்! அதாவது காரைக்காலம்மையார் கதையையும் சேர்த்துச் சொல்லுகிற பெரிய புராணம் பச்சை ஆரியத்தைப் பரப்புவது! நூல் எழுதியவர் கருத்து காரைக்காலம்மையாரை நாடுகிறது; அதற்கு மதிப்புரை தந்தவர் எழுதுகோல் அதே அம்மையாரைப் பொசுக்க முனைகிறது! என்னே உண்மைத் தமிழர்களின் ஒற்றுமை! ஆச்சாரியார் அதோடு விட்டாரா!

> "புறச்சமயம் சென்ற ஆடவர்களைத் திருப்பித் தமிழர் சமயத்தை வளர்த்த திலகவதியாரையும் மங்கையர்க்கரசியாரையும், மறக்கலாகுமோ?"

என்று சிலப்பதிகார மகாநாட்டுப் பந்தலுக்குக் கண்ணகியின் பெயரமைத்தவர்களை நோக்கிச் சாடுகிறார் பேராசிரியப் பெருந்தகையாளர். இதைச் சரியாகப் படித்திருந்தால் பிராக்கட் (தமிழர்)கள் என்ன செய்திருப்பார்களோ! "ஞானசம்பந்தன் என்ற ஆரியனுக்கு அடிமையான மங்கையர்க்கரசியை நம் ஆச்சாரியார் மதிக்கிறாரே! அட,

......இவருக்கும் கொஞ்சம் அந்தத் தனம் இருக்கும்போ லிருக்கே" என்று ஐயப்பட் டிருப்பார்கள். சிலப்பதிகா ரத்தை ஒரு ஐயர் புகழ்ந்தார் என்று வெறுக்கும் ஆச்சாரி யார், இன்னும் கொஞ்சகாலத்தில் பிசாக்சட் (தமிழர்) களின் உபதேச முறையால் 'சீர்திருந்தி' (சீர்திரிந்து என்று படித்துவிடாதீர்கள்) ஆரிய அடிவருடியாகிய மங்கை யர்க்கரசியைப்பற்றி ஒரு வசைபுராணம் பாடுவார் என எதிர்பார்க்கலாம்.

சங்க இலக்கியத்தின் நுட்பமான பாடல்கள் பல வற்றை எத்தனையோ பெண் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவர்கள் பெயரைப் பந்தலுக்கு வைத்திருக்கக்கூடாதா! மிக நியாயமான குறைதான். இல்லையா! கூடுவது சிலப்பதி கார மகாநாடு! சூர்ப்பணகை பேர் வைப்பதுதானே என்று நல்ல வேளையாகச் சொல்லவில்லை. ஔவையார் பந்தல், திலகவதியார் பந்தல்......என்றெல்லாம் பெயர் வைக்கலாம், ஆச்சாரியார் அவர்களே! தங்களைவிட அதிகம் படித்த வர்கள் என்று சொல்லாவிட்டாலும், தங்களுக்கு எந்த வகையிலும் சளைக்காத தமிழ்ப் புலமை படைத்தவர்கள் அந்த மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். தங்களுடைய பட்டியலிலே உள்ள பெயர்கள் அவர்களுக்குத் தெரியாமல் இல்லை.

கண்ணகி பெயரை ஏன் இட்டார்கள் தெரியுமா? தெரிந்துகொள்ளும்: கூடுவது சிலப்பதிகார மகாநாடு: அந்த நூலை இயற்றிய இளங்கோவடிகள் (இவரைப்பற்றியே தங்களுக்கு ஐயமுண்டு என்பது தெரியும்!) கண்ணகியைத் தெய்வமாகப் போற்றியவர்; கண்ணகிக்குக் கலைக்கோயில் கட்டியவர். அவருடைய எண்ணத்தின் வழி நின்று கண்ணகி பந்தல் என்று பெயரிட்டார்கள்.

இன்னொரு காரணமும் உண்டு. அதைச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அன்று மேடையிலேயே சொன்னார். "தீயைக் கண்டு அஞ்சுகிறவள் அல்லள் கண்ணகி..." என்ற வகையில் அவர் சொன்ன காரணம் நினைவுக்கு வராவிட்டால், கறுப்பும் சிவப்புமாகிய வெகுளிகளைக்

கேட்டால் ஒரு வேளை தெரியலாம். இலக்கியத்தைப் படித்தவராகிய தங்களுக்கு முதற் காரணமே போதுமல்லவா ?

★

பதினான்காம் பக்கத்தில் ஆச்சாரியாரின் அறிவு ஒளிர்வதைப் போலக் கண்ணகி எரித்த மதுரைத் தீகூட ஒளிர்ந்திருக்காது. அவருடைய பொன்மொழிகளைக் கேளுங்கள் ; கேட்டுப் பயனடையுங்கள் :

> "கண்ணகி அம்மையார் செய்த தமிழ்த் தொண்டு ஏதேனும் உண்டா? தமிழகத்தின் தலைநகரை எரித்த பெருந்தொண்டு தவிர வேறொன்றும் கண்டோம் இல்லை."

இது முதற் பாணம். இதற்கு விடை ஆச்சாரியார் அவர்களே அருளியிருக்கிறார்கள், தம்மை அறியாமலே!

> "கண்ணகி என்ற ஒரு பெண் தமிழ் நாட்டில் உயிர் வாழ்ந்தது உண்மை என்று கூறுவதற்கு இளங்கோவடிகள் ஒருவர் சாட்சியம் தவிர வேறு ஏதேனும் உண்டா?"

என்று வினா விடுக்கும், இந்தப் பேராசிரியர் கண்ணகியைக் கற்பனைப் பாத்திரமாகத்தானே கொள்கிறார். அந்தக் கற்பனைக் கண்ணகி செந்தமிழ் மதுரையை எரித்ததும் கற்பனையாகத்தானே இருக்கவேண்டும்! இதற்கேன் இத்தனை அலுப்பு! தமிழ்த்தொண்டு செய்யாத ஒரு பொய்ப் பெண்ணைப் போற்றுவதைக் கண்டால் உண்மைத் தமிழராகிய ஆச்சாரியாருக்கு ஆத்திரம் வருகிறது... நாமென்ன செய்யலாம்!

ஆச்சாரியாரின் அறிவு மேலும் கூரிய அம்பு பாய்ச்சுகிறது கேளுங்கள்.

> "இஃதிருக்கட்டும். கண்ணகியைத் தமிழரது சமயத்தைச் சேர்ந்த பெண் என்றுவது கூறுவதற்கும் போதிய ஆதாரம் இல்லையே!......சைனத்தி என்பது கூறாமலே விளங்கும்."

என்ற வரிகளிலே கூறுமலே விளங்கக்கூடிய கருத்தை உண்மைத் தமிழர்க்குக் கூறியே விளக்குகிறார். இந்த விளக்கம் புரிந்துவிட்டால் அந்த உண்மைத் தமிழர்கள், 'தமிழர் சமயமா? அது எது?' என்று கேட்பார்கள். ஆச்சாரியார் 'அதுதான் சைவம்' என்பார். உடனே உண்மைத் தமிழர், ஆச்சாரியாரை உரைகல்லோடு உறவாட வைத்து உண்மைத தமிழ்மையின் மாற்று எவ்வளவில் இருக்கிறது என்று தேய்த்துப்பார்க்கத் தொடங்குவார்கள். ஏனென்றால், உண்மைத் தமிழர்களுக்குச் சைவம் ஒன்றை ஏற்பதிலே எவ்வளவோ இடைஞ்சல்கள் உண்டு. சைவத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால் சிவபெருமான் வருவார்; அந்த ஆதியின் பாதியாகிய அம்மை வருவாள்; இடபம் வரும்; பெரியபுராணம் வந்தேன் என்று வந்துவிடும்...ஐயையோ! ஆச்சாரியரர் அவர்களே! உண்மைத் தமிழர்கள் ஜாக்கிரதை!

சைவத்தில் பிறவாத பாவத்தைச்செய்த கண்ணகியின் மதம் சைனம்! தமிழ்நாட்டிலே காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்த அவளுடைய சமயம் சைனம். 'சரி; பரவாயில்லை' என்கிறீர்களா! ஆச்சாரியார் அனுமதிக்கத் தயாராயில்லை.

> "சைனத்தி என்பது கூறுமலே விளங்கும். எனவே, தமிழ்த்தொண்டும் செய்யவில்லை. தமிழ்ப்பெண்ணும் அல்லள்"

எப்படி! கண்ணகி தமிழ்ப் பெண்ணே அல்லள்! கண்ணகி தமிழ்ப்பெண் அல்லவே அல்ல! ஐயோ தமிழர்களே! பார்த்தீர்களா, இந்தச் சிலப்பதிகாரம் நம்மை எப்படி ஏமாற்றிவிட்டதென்று!

> 'கொங்கச் செல்வி குடமலை யாட்டி
> தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து'

என்றெல்லாம் பாடி ஒரு சைனத்தியைத் தமிழ்ப் பெண் என்று நம்ப வைத்துவிட்டது! ஒழிக சிலப்பதிகாரம்!

ஏ! உண்மைத் தமிழர்களே! எழுமின்! விழிமின்! அப்துல்லாக்களும், அந்தோணிகளும் பெருகித் தமிழர்களை

ஓதுக்கி வருகிறார்கள்! தமிழ்ச் சமயத்தில் பிறந்து தமிழ்த் தொண்டு செய்யும் உமாபதிகளே! சிவபெருமான்களே! இதோ சுப்பிரமணிய அவதாரம் பேசுகிறது கேளுங்கள். தமிழ்நாட்டில் பிறந்தவர்களெல்லாம்—தமிழ் வழியில் வாழ்கிறவர்களெல்லாம் தமிழர் என்று சொல்லித் திரிகிறார்கள். ஏ, உண்மைத் தமிழர்களே! சைவத் தமிழர்களே! எழுமின் விழிமின்! —என்று ஆச்சாரியார் முழங்குவாராக! காவிரிப்பூம்பட்டினத்தில் தமிழ்ப் பெருங்குடியில் பிறந்து கற்புக்கடம்பூண்டு வாழ்ந்து, 'பீடன்று' என்ற பெருஞ் சொல்லை அருளித் தமிழர் மானங்காத்த நங்கையைத் தமிழ்ப் பெண் அல்லள் என்று சொல்லத் துணியும் ஆச்சாரியார் அவர்களே! தமிழ் படித்த ஒரே காரணத்துக்காகத் தமிழினம் தங்களை மன்னிக்குமாக!

★

இனி அடுத்த ஆராய்ச்சித் தலைப்பைத் தரும் முன்னர், சேரன் செங்குட்டுவன்—கடல்பிறக் கோட்டிய குட்டுவன்......என்ற பெயர்கள் சொல்லிச் 'சிலப்பதிகாரம் வரலாற்றுக் கதையன்று; வெறும் கற்பனை' என்ற கருத்தைச் சொல்லத் தொடங்குகிறார். தொடங்கிய மூச்சோடு நிறுத்திவிட்டுத் திடீரென்று அடுத்த தலைப்பை நாடுகிறார். நடுவிலே ஒரு பத்தி தொங்கலாடுகிறது. நூலின் அமைப்பிலே இருக்கும் இந்தக் குறை பொருட்படுத்தத் தக்கதன்று. சரித்திரப் பண்பாடு உண்டா என்று ஆராய்கிற பிற்பகுதியோடு சேர்த்துவைத்து நாம் காணலாம்.

பேராசிரியர் ஆச்சாரியார் அவர்களின் கருத்துப்படி சிலப்பதிகாரம் ஒரு கற்பனைக் கதை; வரலாற்று நூல் அன்று. இந்தக் கருத்தை முதலில் சொல்லியவர் இவர் அல்லர். பி. டி. சீனிவாச ஐயங்கார் முதலாகப் பல அறிஞர்கள் முன்னமே சொன்னதுதான். 'சரித்திர நூலன்று; சரித்திர ஆராய்ச்சிக்குச் சிறிதும் பயன்படாது' என்று எவ்வளவு தீவிரமாகச் சில அறிஞர்கள் சொல்கிறார்களோ, அதைவிடத் தீவிரமாக, 'சரித்திர நூலேதான்; கடந்தகாலத்

தமிழக வரலாற்றை உருவாக்க உதவும் முதல்தரமான கருவி சிலப்பதிகாரம்' என்று தக்க பல சான்றுகள் காட்டி நிறுவுகிற பேராசிரியர்களும் பலர் இருக்கிறார்கள்.

சேரன் செங்குட்டுவன் என்ற பெயர் பதிற்றுப்பத்தில் இல்லாமல் கடல் பிறக்கோட்டிய குட்டுவன் என்றே வழங்குவது போன்ற காரணங்களால் மட்டுமே சேரன் செங்குட்டுவன் வரலாற்று மன்னனல்லன் என்று மறுத்து விட முடியாது. ஆச்சாரியாருக்குச் சற்றும் சளைக்காத புலமையும் ஆராய்ச்சித் திறமும் படைத்த திரு இராகவ ஐயங்கார் இது சரித்திர நூல் என்றே சாதிக்கிறார். பேரா சிரியர் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் 'மகாவம்சம் என்ற இலங்கை நூலில் உள்ள செய்தி சிலப்பதிகாரச் செய்தி யோடு ஒத்து இயங்குவது தற்செயலான வெறும் நிகழ்ச்சி என்று ஒதுக்கிவிட முடியாது' என்பதுபோன்ற பல கருத் துக்களால் விரிவாக ஆராய்ந்து, சிலப்பதிகாரம் சரித்திர நூலே என்று முடிவு கட்டுகிறார். ஆச்சாரியாருக்கு அவர்கள் ஆராய்ச்சியெல்லாம் பிடிக்கவில்லை.

நம்மைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்லுகிறோம். நடந்தது நடந்தபடியே சொல்லும் செத்த சரித்திர நூலன்று சிலப்பதிகாரம். வரலாற்றுப் பின்னணியில் எழுந்து, புனைந்துரைகலந்து தீட்டப்பெற்ற ஒப்பற்ற ஓவியம் சிலப்பதிகாரம். சங்ககாலத்தை அடுத்து இருந்த தமிழகத் தின் நிலைமையினைத் தெள்ளத் தெளியக் காட்டுவதற்குச் சிலப்பதிகாரமே உதவவல்லது; அந்த அளவில் அது வா லாற்று நூலேதான். புனைந்துரையும் கலந்தது ஆகையினால், ஒவ்வொரு நிகழ்ச்சியின் ஒவ்வோர் எழுத்துக்கும் சரித் திரப் பொருத்தம் பார்க்கப் புகும் ஆச்சாரியாரின் முயற்சி படுதோல்வியின் எதிரொலி கிளப்பும் ஏமாற்றமாக முடி வதில் வியப்பில்லை.

பரணர் ஏன் பதிற்றுப்பத்தில் செங்குட்டுவனின் வட நாட்டுயாத்திரை பாடவில்லை என்பதற்குச்சிலப்பதிகாரமணி கள் கூறும் காரணம் யாதேனும் உண்டோ என்று வினவு கிறார், சரித்திரத்தை அலசிய கையோடு சிலப்பதிகாரத்தை

யும் அலசுகிற ஆச்சாரியார். இராகவ ஐயங்கார் எழுதியுள்ள புத்தகம் நினைவில் இருக்குமென நினைக்கிறோம். இதை நினைவூட்டச் சிலப்பதிகார மணிகள் தேவையில்லை; வீட்டிலுள்ள புத்தகத்தைத் தேடிப் பார்த்துப் படிக்கும் எண்ணம் உண்மைத் தமிழர்க்கு இருந்தால் போதுமானது. சிலப்பதிகார இலக்கியத்தைத் தமிழினத்தின் ஒரு பெரிய தேசிய இயக்கமாக்கிய சிலப்பதிகார மணிகளுக்கு இன்னும் ஆக்க வழிப்பட்ட திட்டங்கள் எவ்வளவோ உண்டு.

மீண்டும் சொல்கிறோம்: ஏதோ வெளியே தெளிவாகச் சொல்ல முடியாத காரணத்தால் சிலப்பதிகாரத்தைப் பற்றிய எதிர்மறை ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டுள்ள பேராசிரியர் அவர்களே! சிலப்பதிகாரம் வரலாற்றுப் புனைகதை—Historical fiction—ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் வலியுறுத்தும் சான்று தேடவேண்டாம்; பயன் தாராத முயற்சி......

சரித்திரம் என்ற மருட்கையால் சிலப்பதிகாரத்தை வெறுத்து, அதிலுள்ள செந்தமிழ்ப் பண்பினையும் சந்தேகித்து, அதைப் போற்றுவோரைத் தூற்றவும் துணிந்து, வீணான முயற்சியிலேயே பல காலம் கடத்திவிட்டார் பேராசிரியர். இவ்வளவு நாள் பட்ட பாடும் பயனற்றுப் போயிற்று. வாழ்க்கையிலும் தொழிலிலும் ஏற்பட்ட கசப்பும் புளிப்பும் சிலப்பதிகாரச் செய்யுள்மீது எரிப்பாகப் புறப்படுகிறதோ?

அந்த எரிப்பு எவரைப் பார்த்தாலும் தன் மானமற்ற தமிழர்களோ என்று ஐயப்படச் சொல்கிறது. ஆகவே முறையிடுகிறார்.

"தன்மரியாதையுள்ள தமிழர்களே! நீங்கள் நன்கு நோக்குங்கள்"

என்று சுயமரியாதை பிராக்கட் (தமிழர்)களைச் சொல்லாமல் சொல்லி முறையிடுகிறார். ஐயோ, பாவம்! புலமைச் சூழலிலே பாராட்டற்றுப் போயிற்று. மதிப்புரை தர எவரேனும் வரமாட்டார்களா என்ற ஏக்கம். காத்துக்கிடந்தார். முதலில் துதி பாடி, பின்னர் வசை பாடத் தொடங்கிய

'விடுதலை' உதவிற்று—இல்லை, அதற்கு இவர் உதவினர். எதற்கும் துணிந்து, எதையும் அறியாத, சிந்திக்கும் உரிமையைப் பறிகொடுத்த கூட்டம்ஒன்று உண்டல்லவா? அதை அழைக்கிறார். "ஏ! தன்மரியாதைப் பெரியார்களே!" என்று இட்ட கூக்குரல் பயனற்றுப் போகவில்லை. கறுப்பும் சிவப்புமாகக் காட்சியளிக்கிறது. தமிழ்ப் புலமையின் இந்த அவலக் காட்சிக்கு நம்முடைய கசிந்த மனத்தின் அநுதாபங்கள் உரியன.

★

அரசமரத்தைப் பிடித்த சனியன் பிள்ளையாரையும் சேர்த்துப் பிடித்ததாம். சிலப்பதிகாரத்தைக் காய்கிற ஆச்சாரியார் மணிமேகலையையும் விட்டுவைக்கவில்லை. கோவலனின் சரித்திர முரணை விளக்கத் தமது உறுதுணையாக மணிமேகலையை நாடிய ஆச்சாரியார், அதை மறந்து விட்டு 'இரட்டைக் காப்பியங்கள் என்று எவன் சொன்னான்' என ஆரம்பிக்கிறார். சிலம்பும் மேகலையும் ஒன்றோடொன்று கதையளவால் ஓரளவு தொடர்புடையன; அவ்வளவே. பதிகங்களை வைத்து இரண்டும் ஒரு காலத்தன என்று கொள்வது எள்ளத்தனையும் பொருந்தாது. இந்தப் பேருண்மையைக் கண்டுபிடிக்க எந்தப் பேராசிரியரிடத்திலும் படிக்க வேண்டாம். தமிழ் புரிந்து இரண்டு நூல்களையும் படித்தாலே போதும்,

ஆச்சாரியார் அவர்கள் இந்த உண்மையை 1935லேயே கண்டுபிடித்துவிட்டாராம். 'இச்செய்தியை இப்போதுதான் தாங்களே புதிதாகக் கண்டுபிடித்ததாகச் சில போலிப் பட்டதாரிகள் பத்திரிகையில் எழுத ஆரம்பித்துள்ளனர்' எனக் குறைப்படுகிறார் P. O. L. 'பட்டதாரி' யாகிய ஆச்சாரியார். இந்த முழுப் பெருமையாவது அவருக்கே இருக்கட்டும். எல்லாவற்றிலும் அவரை ஏமாற்றி விட்ட சிலப்பதிகாரம் இந்த ஒரு இடத்திலாவது அவருக்குச் சிறிது பிடி கொடுக்குமாக. ஐயோ பாவம்!

இந்த இரட்டைக் காப்பிய ஆராய்ச்சிக்கும் நூலின் தலைப்பாகிய ஆரியக் கற்பனைக்கும் என்ன தொடர்பு என்று

பேராசிரியர் அவர்களைக் கேட்கவேண்டாம். நாமே விளக்கம் தருகிறேம். ஆச்சாரியார் அவர்களின் ஆராய்ச்சியை யெல்லாம் தமிழ்ப் புத்தகமாக வெளியிட்டார். அது பெரியதாக இருக்கிறது. இந்தச் சமயத்தில் (—எந்தச் சமயத்தில் என்பதற்கான விளக்கம் மதிப்புரைப் பெரியாரைக் கேளுங்கள்)—அந்தப் புத்தகத்தைச் சுருக்கித் தரலாம் என்று நினைத்தார் ஆச்சாரியார். எல்லாம் கலந்து கொடுத்த புத்தகம் இது. சிலப்பதிகார ஆராய்ச்சி என்றால் தன்மானத் தமிழர்கள் வாங்குவார்களா! ஆராய்ச்சி என்றாலே, உடம்புக்கு ஒத்துவராதே! 'சிலப்பதிகாரமும் ஆரியக் கற்பனையும்' என்று தலைப்பை இட்டால், புத்தகம் மாயமாய்ப்போகும்......யார் யார் பெட்டி பேழைகளை யெல்லாமோ நிரப்பி ஆச்சாரியாரை ஏமாற்ற நினைத்தது சிலப்பதிகாரம். ஆரியத்தோடு சேர்த்துக் கட்டி அதையே ஏமாற்றிவிட்டார் ஆச்சாரியார்!

★

சரித்திரம் இல்லை என்று மறுத்த மூச்சோடு இரட்டைக் காப்பியம் என்பது தவறென்ற உண்மையைக் கண்டு பிடித்த பெருமைக்கு ஆச்சாரியாருக்கு முடிசூட்டினேம். அவர் செய்த இன்னெரு ஆராய்ச்சியை முன்னே விட்டு வந்திருக்கிறேம். அதைப் பார்க்கலாம்.

'சிலப்பதிகாரத்தே தமிழ்ப் பண்பாடேனும் உண்டா?' இது ஆச்சாரியாரின் அருமையான கேள்வி. ஆண்டவனே! தனித் தமிழ்ச் சமயமான சைவத்தின் முழு முதலே! சிலப்பதிகாரம் தமிழ்ப் பண்பாடேனும் உடையதா என்று கேட்கும் இந்த உண்மைத் தமிழருக்குச் சிறிது கருணை காட்டக் கூடாதா என்று முறையிட வேண்டியதுதான்.

நாம் ஏற்கெனவே கூறியுள்ளபடி சங்க காலத்தை அடுத்து நிலவிய தமிழகத்தின் நிலையையே சிலப்பதிகாரத்தில் காணலாம். சங்க நூல்களிலேயே ஆரிய வேள்வி முதலாயின இடம்பெற்றதைக் காண்கிறேம். எனவே,

சிலப்பதிகாரத்தில் அக் கலப்புப் பண்பு காணப்படுவது வியப்பில்லை. கலப்புப் பண்பை விளக்குவதால் தமிழ்ப் பண்பாடு குலைந்துவிடாதா என்று ஆச்சாரியார் கேட்கலாம்.

ஆச்சாரியார் கருத்துப்படி தமிழரல்லாத முஸ்லிம், கிறிஸ்தவர், சைனர் என்றின்ன பிறரோடு தனித் தமிழராகிய உண்மைத் தமிழர்கள் எப்படி வாழ்கிறார்கள்? கலப்படக் காலத்தில் தங்கள் தூய்மையை அந்த உண்மைத் தமிழர்கள் இழந்துவிட்டார்களா? இல்லையே!

இது கிடக்கட்டும்; எதிர்ப்பு முறைக்கு இது சரி. நேர்முறைக்கு வேறு பதில் உண்டு. எல்லாம் கலந்து தெளிவான எதுவும் உருவாகாத ஒரு மாறுதல் — காலம் சிலப்பதிகாரக் காலம். அப்போது ஒருமையை எதிர்பார்க்க முடியாது; ஒற்றுமையை நிலைநாட்ட முயலலாம். அந்த முயற்சியைச் சித்தரிப்பதே சிலப்பதிகாரம். தேவந்தி என்ற பார்ப்பனத்தி பூசை செய்வது இதனால் ஏற்பட்டது தான். மாடலமறையோன் வேதவேள்வி செய்யத் தூண்டுகிறான்; சைனத்தைப் பரப்பும் தொண்டிலே கவுந்தியடிகள் ஈடுபடுகிறார். பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் இருந்தது போலவே எல்லாச் சமயத்தவரின் பள்ளிகளும் சிறப்புற அமைந்திருந்தன — இவையெல்லாம் சிலப்பதிகாரமும் பிற தமிழ் நூல்களும் படித்த ஆச்சாரியார் மறந்துவிட்டிருப்பது பெரு வியப்புக்குரியது. பல பண்புகள் கலந்த நிலையைச் சிலம்பு தருகிறது; உண்மைதான். தமிழ் நாட்டின் அந்தக் கால ஓவியம் அது. அதற்கு யார்தான் என்ன செய்யமுடியும்? இன்றைய 'உண்மைத் தமிழர்களின்' மூதாதையர் என்ன செய்தார்களோ—

பேயும் பிசாசும், சுவர்க்கமும் நரகமும் வருகின்றனவே—இது தமிழ்ப் பண்பாடா என்கிறார் ஆச்சாரியார்? எந்த நாட்டு இலக்கியத்திலே இவை இல்லாமல் போயின! கிரேக்க இலக்கியப் போக்கு ஆச்சாரியாருக்கு நினைவுக்கு வரவேண்டும். ஆங்கில இலக்கியத்தில் இல்லையா என்று உசாவிப் பார்க்கட்டும். எந்த மொழியிலும் வரக்கூடிய நிலை அது.



21 B

புராணக் கதைகள் சங்க நூல்களிலும் இருக்கின்றன; வேதியரைப் போற்றும் வழக்கமும் அங்கே காணாதது அன்று. ஏற்கெனவே கலந்து நாட்டில் பெருகிவந்ததை உருவாக்கினர் இளங்கோ. ஆனியற் பார்ப்பன மாக்கள் போற்றுதற் குரியர் என்ற கருத்து ஏனைய பழைய நூல்களில் இல்லையா? அவற்றையும் ஆரியக் கற்பனை என்று சொல்லலாமா? காலத்தின் குற்றமும் குறையும் காலத்தைச் சித்தரிக்கும் கவிஞனைத்தான் சாரும் என்று பேசிப் பழிக்கிற செயலை அறிவுடைய ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக் கொள்வார்களா?

மேற்குறித்த கருத்துக்களோடு ஆச்சாரியார் கூறுவனவற்றைக் கவனித்தால் ஒன்று துலங்கும். காலத்தின் 'குற்றத்தை'க் காவியத்துக்கு ஏற்றும் வீண் முயற்சியில் ஈடுபடுகிறார். இது தவறு என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு தருகிறேன். 20-ம் பக்கத்திலும், 43-ம் பக்கத்திலும் ஆங்கிலச் சொற்கள் காணப்படுகின்றன. ஆங்கிலச் சொற்களை எழுதுவது உண்மைத் தமிழர் பண்பாடாகுமா — அறிவுக்குப் பொருந்துமா? மற்றொன்று—கிறிஸ்தவ சகாப்த ஆண்டுகளையே நெடுகிலும் ஆச்சாரியார் குறிப்பிடுகிறார். இது தமிழ்ப் பண்பாடாகுமா? தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களே தமிழர் ஆகார் என்ற அளவுக்குப் போகக்கூடிய இந்த 'உண்மைத் தமிழர்' எந்த நாட்டானோ புகுத்திய கிறிஸ்தவ ஆண்டைத் தரலாமா? உண்மைத் தமிழரின் யாண்டு ஏதேனும் தருதலன்றோ தமிழ்ப் பண்பாடாகும்!

ஐயகோ! இதுவோ ஆராய்ச்சி!

"ஐயோ ஆரியம்! அடிதொட்டு அவ்வளவும் ஆரியம்" என்று குறைப்படுகிற ஆச்சாரியார் அவர்களே! வைதிக மணத்தில் தொடங்கி வேத வேள்வியொடு முடியும் சிலப்பதிகாரம் ஆரியக் காப்பியம் என்கிறீர்களே! தாங்களே முன்னே எழுதிய புத்தகத்தில்:

> "சிலப்பதிகாரம் எல்லாச் சமயங்களையும் எல்லாக் கடவுளர்களையும் எல்லா ஒழுக்கங்களையும் செவ்வனவே நடுநிலையிலிருந்து



68659
0-,1092;9
N52

கூறியிருக்கின்றது. எந்த மதத்தினரையும் உயர்வு தாழ்வு சுருதிக் கூறவில்லை......... அதில் கூறப்பெறாத அக்காலத்தைய மதங்களே இல்லை; ஒழுக்கங்களும் இல்லை; வருணனைகளு மில்லை. எனவே, இவர் சமயப்பூசல் ஒரு சிறிதும் இல்லாத ஒரு சிறந்த பெருங்கலைஞராக இருத்தல் வேண்டும் என்பது புலனாகாமற் போகாது"

என்று அருளிச் செய்திருக்கிறீர்கள். ஆறின கஞ்சி பழங் கஞ்சி என்று அதை ஒதுக்கவா? ஏதோ சின்னஞ்சிறிதாக எழுதிப் பெரியாரின் மதிப்புரை பெறும் வேகத்தில் தீட்டி, 'திராவிடம்' என்ற அடுத்த புத்தகத்துக்கு வழிகோலிய இந்தப் புத்தகத்தை ஒதுக்கவா?

முன்னே ஒன்று; பின்னே ஒன்று—என்று மாறுகிற நிலையிலே இருக்கிற தங்களைச் சிலப்பதிகாரம் ஏமாற்றி விட்டது என்றால் யாரென்ன செய்யலாம்! வீணான எரிச்சலைப் பரப்பி யாருக்கு என்ன புண்ணியம் உண்டு?

'ஐயோ தமிழ்ப் பண்பாடு போகிறதே' என்று அலறுகிற தங்களுக்குப் பின்வரும் பகுதியைத்தெரிவிக்க விரும்புகிறேன். தங்களுடைய இரண்டாவது புத்தகத்துக்கு மதிப்புரை தந்தாரே ஒரு பெரியார், அவர் எங்கேயோ என்னவோ பேசினாராம். அவர் பேச்சுக்கு வந்த மறுப்புரை பின்வருவது:

"உண்மையான திராவிடன்—தமிழ் மகனாக இருந்தால், சிலப்பதிகார மாநாடு நடத்துவானா? பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்துகொள்வதற்கு ஆக நடத்தப் படுவது என்பதல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்?—என்று சிலப்பதிகார மாநாடு நடத்தியவர்களுக்குச் 'சிறப்புரை' வழங்கியிருக்கிறார் ஈ. வெ. ரா. அவர் கருத்துப்படி, சிலப்பதிகார மாநாடு நடத்து

வோர், அந்தக் காவியத்தின் சிறப்புப்பற்றிப் பேசுவார் அத்தனைபேரும் போலித்தமிழர்கள் ஆகின்றனர். இதற்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பைப் புலவர் பெருமக்களுக்கு விட்டுவிடுகிறோம். 'சிலப்பதிகாரம் என்பது ஆரியத்தைப் பரப்புகிற நூலென்பது அல்லாமல் வேறு என்ன? ஆரம்ப முதல் இறுதிவரையில் ஒரே ஆரியந்தானே காட்சியளிக்கிறது?" என்கிறார் ஈ. வெ. ரா. மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். அதுபோல எப்போதோ எதற்காகவோ 'ஆரிய'த்தின் மீது வெறுப்பேற்பட்டன காரணமாகக் காண்பதெல்லாம் ஆரியமாகக் காட்சியளிக்கிறது ஈ. வெ. ரா. வுக்கு!

"கொடுங்கோலனை எதிர்த்துப் போராடும் கண்ணகியின் புரட்சி ஆரியம்! அறியாது செய்த பிழைக்குத் தனது உயிரையே அர்ப்பணிக்கும் நெடுஞ்செழியனின் தியாகம் ஆரியம்! அரசன் உயிர் நீத்த அக்கணமே தானும் உயிர் நீத்த கோப்பெருந்தேவியின் அன்பு நிறைந்த காதல் ஆரியம்! வாய் கொழுத்துப் பேசிய வடவேந்தருடன் போரிட்டுத் தமிழரின் ஆற்றலைப் புலப்படுத்திய செங்குட்டுவன் செயல் ஆரியம்! மூன்றாகப் பிளவுபட்டுக் கிடந்த தமிழகத்தை ஒன்றாகப் பிணைத்துக் காட்டிய இளங்கோவின் சித்திரம் ஆரியம்!

"விலைமகளுக்குப் பிறந்தும் ஒருவனையே காதலித்து வாழ்ந்து, அவன் இறந்த பிறகு வாழ்விற்குரிய இன்பங்கள் அனைத்தையும் இழந்துவிட்ட மாதவியின்

மனப் பண்பு ஆரியம்! பார்ப்பனத் தோழி யின் கருத்துவழி காமன் கோயில் சென்று வழிபட மறுத்த கண்ணகியின் செயல் ஆரியம்!

"இத்தனையும் தமிழ்ப் பண்பிற்கு எதி ரான ஆரியப் பண்புதான் என்றால், அந்த ஆரியப் பண்பு நீடூழி வாழ்வதாகுக!"

இந்த மறுப்பிலே காணும் கருத்துக்கள் தாங்கள் அறியாதன அல்ல. ஆனால், எதற்கோ எப்போதோ ஏற் பட்டுவிட்ட வெறுப்பினால், தமிழ்ப் பண்பாட்டுக்கும், தமிழன் நலத்துக்குமான மேலே கண்ட கருத்துக்களை மறைக்கப் பார்க்கிறீர்கள், அல்லது மறந்துவிட்டதாக நினைத்துக்கொள்கிறீர்கள்! தாங்கள் மறக்கலாம்; தமிழ் நாடு மறக்காதே!

ஐயா, தமிழ்ப் பேராசிரியர் அவர்களே! தாங்களே சொல்லியுள்ளபடி 'நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற புலவர்மரபினைச் சேர்ந்த' தாங்கள் இல்லாத ஒன்றைச் சொல்லி ஏலாத ஒன்றைப் பரப்பி நலமல்லாத முயற்சியில் ஈடுபடலாகுமா? அதுதானும் தமிழ்ப் பண்பாடாகுமா?

★

'காவியப் பண்பாடுண்டா' என்ற இறுதிக் கணையிலே வெற்றி எதிர்பார்க்கிறார் பேராசிரியர். பத்தாம் நூற் றாண்டில் தோன்றிய இலக்கியம் பதினெட்டாம் நூற் றாண்டில் தோன்றிய இலக்கணத்துக்குச் சரியாக இல்லை என்ற கணக்கில் பேசுகிறார் ஆச்சாரியார். சிலப்பதிகாரம் தோன்றி எவ்வளவோ காலம் கடந்த பின்னர்த் தோன்றிய தண்டியலங்காரச் சூத்திரத்தை இறுகப் பிடித்துக் கொண்டு, 'ஐயோ இதைப்போய் எவனாவது பெருங் காப்பியம் என்று சொல்வானா? கோவலன் தன்னிக ரில்லாத் தலைவனா? வீடுபற்றிப் பேசாத இதனை எப்படிப் பெருங்காப்பியம் என்று சொல்வது' என்றெல்லாம் பேசு

வது ஆராய்ச்சியாளனுக்கு அழகு ஆகாது. இன்றைக்குள்ள ஆங்கில இலக்கிய ஆராய்ச்சிப்படி சிலப்பதிகாரம் அவல நாடகமா, களிநாடகமா என்று ஆராய்வது எவ்வளவு பொருத்தமற்றதோ, அதே அளவு பொருத்தமின்மையைத்தான் ஆச்சாரியார் ஆராய்ச்சியிலும் காணுகிறோம். சிற்சில கூறுகள் தற்செயலாக ஒத்திருக்கலாம். பல வகைகளில் வேறுபட்டே நிற்கும்.

அதிகாரம், காதை, காண்டம்......போன்ற சொற்கள் உள்ள இந்த இலக்கியம் தமிழ்க்காவியப் பண்பாடுடையதாகுமா என்று கேட்கிறார் ஆச்சாரியார். உண்மைத் தமிழரின் இந்தக் கேள்வி நேர்மையானதுதான். உண்மைத் தமிழராகிய பேராசிரியரின் பெயர்......? அதுதான் போகட்டும்; சர்வகலாசாலை, சிவகணம், சமர்ப்பித்தேன், நிமித்தம்......என்பன போன்ற சொற்களைப் பெய்து எழுதலாமா?

இவையெல்லாம் தமிழ்நாட்டுப் பழமொழி ஒன்றைத்தான் நினைவூட்டுகின்றன. வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம். சிறு பருவத்திலோ, வாலிபத்திலோ—எப்போதோ எதனாலோ சிலம்பின் மீது ஆச்சாரியாருக்கு ஏற்பட்ட சினம் இன்னும் தணியவில்லை.

ஆச்சாரியாருக்கு மதிப்புரை வழங்கியவர்,

> 'வித்வான் வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் அவர்கள் கம்மிய வகுப்பைச் சேர்ந்தவராய் இருப்பதாலும், சிலப்பதிகாரத்தில் பொற்கொல்ல வகுப்பை இழித்துக் கூறி இருப்பதாலும், சிலப்பதிகாரத்தில் குற்றம் காண முன்வந்தார் என்று' என்று ஒரு சிலர்... இருப்பதைக் காணுகிறேன்."

என்று சொல்லுகிறாரல்லவா?

ஆச்சாரியார் அவர்களுக்குச் சிலப்பதிகாரத்தின்மீது வெறுப்பேற்பட்டது தன் இனத்தை அது பழிப்பதாகக்

கருதுவதால் இராது என்றே நாம் மிக உறுதியாக நம்பு கிறேம். பின்னே ஏன் இப்படி வெறுப்புரைகளை அள்ளிச் சொரிகிறர் என்றல், நமக்குப் புரியவில்லை. மேலும், முன்னர் எழுதிய நூலில் உள்ளதை விட இதில் வெறுப்பு மிக விரைவாக ஏறியிருப்பதும் தெரிகிறது. இவற்றை யெல்லாம் பார்க்கிறபொழுது ஆச்சாரியார் அவர்களுக்கு நாம் கூறக்கூடியன இவ்வளவே :

"ஐயா பேராசிரியர் அவர்களே! தாங்கள் படைத்துள்ள புலமைக்கு எம் உளமார்ந்த வணக்கம். தங்கள் புலமை போகும் போக்கு எவருக்கும் நன்மை பயப்பதாக இல்லை. அதோடு, பொய்யைப் பரப்பும் கூட்டத்தைத் தட்டிக் கொடுக்கும் திருப்பணியில் ஈடுபடுகிறது.

"ஐயா ஆச்சாரியார் அவர்களே! இனிமேல் சிலப்பதிகாரம் உங்கள் சிந்தையைத் தொடுவது இந்தப் பிறவியில் இல்லை. தங்களுக்கு இருக்கிற வெறுப்பைப் பார்த்தால், மறு பிறவி இருந்தாலும் தமிழ்நாட்டிலேயே பிறக்கமாட்டீர்கள்போல் தெரிகிறது. பிறந்துவிட்டால் சிலப்பதிகாரம் கண்ணில் பட்டுவிட்டால் என்ன ஆவது!

"தமிழில் சுவை ததும்பும் நூற்கள் பலவுள்ளன. அவற்றுள் சிலப்பதிகாரமும் ஒன்று" என்று முன்னே கூறியருளிய தாங்கள், "தமிழகத்தை ஏமாற்றி வரும் நூற்களுள் தலைசிறந்தது சிலப்பதிகாரம்" என்று பேசத் தொடங்கியிருக்கிறீர்கள்.

"சிலப்பதிகார ஆராய்ச்சி என்று முன்னே பெயரிட்டு வரைந்த தாங்கள் சிலப்பதிகாரமும் ஆரியக் கற்பனையும் என்று தீட்டிவிட்டீர்கள்.

"இந்தப் போக்கு எங்கே சென்று முடியுமென்பது, இப்போது வெளியிட்டுள்ள புத்தகத்தின் இறுதியில் காணப்படும் புத்தக விளம்பரத்தாலும், முதலில் வரையப் பெற்றுள்ள மதிப்புரையாலும் தெளிவாகிறது.

"நாங்கள் சிலப்பதிகாரத்துக்காக வருந்தவில்லை. தங்களுக்காகவும் வருந்தவில்லை. தமிழ் படித்த புலவனுக்குப்

போதிய எழுச்சி யூட்டுவார் இல்லை யென்றால், அவனுடைய வாழ்க்கை எப்படி அவல நாடகமாகிறது என்பதை எண்ணும்போது, 'ஐயோ தமிழே!' என்று தமிழை எண்ணித்தான் வருந்துகிறேம்.

"சிலப்பதிகாரம் தங்கள் அடிமையாகப் போவதுமில்லை. தாங்கள் சிலப்பதிகாரத்துக்கு அடிமையாகித் தொண்டூழியம் செய்யும் துரதிர்ஷ்டம் தமிழ்நாட்டுக்கு ஏற்படவும் வேண்டாம்.

"வணக்கம் — தங்கள் புலவமக்கு."

21/3 1-23

68659

O-1092:8 N52

பொன்னி அச்சகம், தண்டையார்ப்பேட்டை—சென்னை—21

தொடர்ந்து வரும்

**கன்னி வெளியீடுகளை**

எதிர்பாருங்கள் !